# <u>பொருள்கள்</u>

1. இந்நகராட்சி பகுதிகளில் நடைப்பெறும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் முடிவடையும் சாலைகள் மற்றும் தெருக்களை சீரமைக்கும் பொருட்டு ரூ.1106.50 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (TUFIDCO) உள்கட்டமைப்பு நிதிதிட்டம் மூலம் 11% சதவீதம் வட்டியுடன் (Interest) கடன் வழஙக, மேற்படி நிறுவனத்தில் 13.04.2015–ம் தேதிய TUFIDCO/TIFS/M (MU)/2015-16 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 1994/2015/இ1

**தீர்மான எண் : 343 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

2. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49–ல் காமராஜ் நகர் மற்றும் தட்டான்விளை பார்க் ரோட்டில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்க மதிப்பீடுத்தொகை ரூ.13,60,000/–க்கு மன்ற தீர்மான எண்.1007 நாள்.28.11.2014–ல் அரசு மானியம் பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசு மானியம் கிடைக்கப்பெறவில்லையென்பதால், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியில் செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 3292/2014/இ1

**தீர்மான எண் : 344 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

3. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.40 –ல் மறவன்குடியிருப்பு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் வரி வசூல் மையம் அமைத்தல் வேலைக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1) திரு. P. முரளீதரன் – 0.02% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>–** 1) ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. P. முரளீதரன் என்பவர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2/2015–16/இ1

**தீர்மான எண் : 345 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

4. இந்நகராட்சிக்குட்பட்ட அனாதை மடம் மைதானத்தில் பொருட்காட்சி நடைபெற உள்ளதால் அனைத்து பகுதிகளிலும் உள்ள முட்புதர்களை அகற்றுதல் மற்றும் போதுமான குடிநீர் வசதி செய்தல் வேலைக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1) திரு. M. வெற்றிவேலன் – 0.25% குறைவு
2) திரு. M. மரியஜாண் – 6.39% அதிகம்

**<u>அலுவலக குறிப்பு</u>**– 1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. M. வெற்றிவேலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3/2015–16/இ1

**தீர்மான எண் : 346 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

5. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48–ல் உள்ள சரலூர் சாலையில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நிறைவடைந்துள்ளதால்', மேற்படி இடத்தில் தார்ச்சாலை அமைக்க நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<u>ஓப்பந்தப்புள்ளி விபரம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு. M. வெற்றிவேலன் | – | 1% முன் வைப்புத்தொகை அலுவலக டெண்டர் பெட்டியில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 2) | திரு. ஜோசப்அருள்ராஜ் | – | 1 % முன் வைப்புத்தொகை அலுவலக டெண்டர் பெட்டியில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 3) | திரு. R. குமார் | – | 1 % முன் வைப்புத்தொகை அலுவலக டெண்டர் பெட்டியில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 3) | திரு.T.அசோக்குமார் | – | 0.07% குறைவு |

**<u>அலுவலக குறிப்பு</u>**– 1) E Tender மூலம் வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1,2 மற்றும் 3 ஒப்பந்தப்புள்ளிகளில் 1 % முன் வைப்புத்தொகை அலுவலக டெண்டர் பெட்டியில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் நீக்கம் செய்யப்பட்டு வரிசை எண்.4–ல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.184/2014–15/இ1

**தீர்மான எண் : 347 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

6. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38–ல் சிவன்கோவில் சாலையில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நிறைவடைந்துள்ளதால் மேற்படி சாலையில் தார்ச்சாலை அமைக்க நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<u>ஓப்பந்தப்புள்ளி விபரம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு. M. வெற்றிவேலன் | – | 4.98% குறைவு |
| 2) | திரு.I.பாஸ்கரன் | – | 1 % EMD not Sumitted MunicipalTender Box |
| 3) | திரு. P. இசக்கிமுத்து | – | 1 % EMD not Sumitted Municipal Tender Box |

4) Sharvaa Associates - 1% EMD not Sumitted Municipal Tender Box

**<u>அலுவலக குறிப்பு</u>–** 1) வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 முதல் 4 வரை உள்ள ஒப்பந்ததாரர்கள் அலுவலக டெண்டர் Box –ல் 1% முன் வைப்புத்தொகை செலுத்தவில்லை. ஏனவே வரிசை எண்.1–ல் மதிப்பீட்டை விட 4.98% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. M. வெற்றிவேலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.222/2014–15/இ1

**தீர்மான எண் : 348 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

7. இந்நகராட்சிக்குட்பட்ட பேலஸ் தெரு, கோர்ட்ரோடு, காலேஜ் ரோடு ஆகிய பகுதிகளில் தார்பேட்ச் ஒர்க் செய்வதற்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஓப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1) திரு. R. குமார் – 0.002% குறைவு
2) திரு. I. பாஸ்கரன் – 0.42% அதிகம்

**<u>அலுவலக குறிப்பு</u>–** 1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.R.குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகப்பட்டதை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.108/2014–15/இ1

**தீர்மான எண் : 349 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

8. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.45–ல் பேரின்ப சாலையில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நிறைவடைந்துள்ளதால், அதில் பேவர்பிளாக் அமைத்தல் பணி மேற்க்கொள்ள நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஓப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1) திரு. T. அசோக்குமார் – 3.99% குறைவு
2) திரு. P. முரளீதரன் – 4.79% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>–** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. P. முரளீதரன் என்பவர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.205/2014–15/இ1

**தீர்மான எண் : 350 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

9. முதன்மை செயலர் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தில் திருமதி. என்.பிளாரன்ஸ் மேரி, சுகாதார ஆய்வாளர் என்பவர், சென்னை மாநகராட்சியில் 08.05.2012 அன்று முற்பகல் சுகாதார ஆய்வாளராக மண்டலம், 5–ல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், அன்னார் பதவியில் தகுதிகாண்பருவம் முடிக்கப்பட்டுள்ளதாகவும், மற்றும் அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளதாகவும், அன்னார் மீது துறை ரீதியாக குற்றச்சாட்டுக்களோ, ஒழுஙகு நடவடிக்கைகளோ ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ‘

தற்போது அன்னார் தனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளதாகவும், கணவர் பராமரிப்பில் பிள்ளைகள் உள்ளனர் எனவும்,தனது மாமியார் அவர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் தனது கணவருக்கு இடுப்பு எலும்பு விலகிவிட்டதால் அவருக்கு சிகிச்சை செய்ய வேண்டி சூழ்நிலையில் உள்ளதாலும் தனது நிலைமையை கருணையுடன் பரிசீலித்து சொந்த மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை கடித எண்,27274/மாற–6/96–1, நாள்.08.07.1996–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளில் சம்மந்தப்பட்ட ஆணையர் அவர்கள் அன்னாரது மனுவை பரிசீலித்து அன்னாரை விடுவிக்கும் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சிக்கு ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகர முனிசிபல் சட்ட விதி 1919–ன் துணை விதி 97 (C) –ல் மாநகராட்சியிலிருந்து நகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி அன்னாரின் கோரிக்கையினை ஏற்று சென்னை மாநகராட்சியிலிருந்து நாகர்கோவில் நகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் அனுமதிக்க வேண்டியுள்ளார். மன்றம் பார்வையிட்டு பரிசீலிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>– மன்றம் பரிசீலித்து அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண். 005687/2015/எச்1

**தீர்மான எண் : 351 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

10. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 கட்டையன் விளை நகர புல எண்.A1/40–19 –ல் அமைந்துள்ள அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவில் எந்தவித வியாபார நோக்கமின்றி பொதுமக்களால் வழிபாட்டு ஸ்தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் தமிழ்நாடு மாவட்ட நராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 86 A–ன் கீழ் மேற்படி கோவிலுக்கு கதவு எண் வழஙகி சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 21271/2014/அ2

**தீர்மான எண் : 352 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

11. இந்நகராட்சிக்குட்பட்ட மூன்று இடஙகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு படி அம்மா சிமிண்ட் திட்டம் விளம்பர போர்டு நகராட்சி அலுவலகம் முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு மற்றும் அண்ணா பேருந்துநிலையத்திலும் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3338/2015/இ1

**தீர்மான எண் : 353 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

12. இந்நகராட்சிக்குட்பட்ட PWD சாலையிலிருந்து மாவட்ட நீதிமன்றத்திற்கு செல்லும் சாலையில் ராமசாமி மெமோரியல் பார்க் முன்பக்கத்தில் மழைநீர் வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்தும், சாலையின் குறுக்கே கல்வெர்ட் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,80,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>— 1) அனுமதிக்கலாம்.

2) ஓடை அடைபட்டு சுகாதாரக்கேடு ஏற்படுவதால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 7317/2015/இ1

**தீர்மான எண் : 354 — <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

13. நாகர்கோவில் நகராட்சி வார்டு எண்.49—ல் தட்டான்விளை அம்மன்கோவில் வடக்கு தெருவில் போர்வெல் அமைத்து மெயின் குழாயுடன் இணைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2,80,000/—ஐ குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 21765/2015/இ2

**தீர்மான எண் : 355 — <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

14. நாகர்கோவில் நகராட்சி வார்டு எண்.49—ல் தட்டான்விளை மெயின்ரோடு, தட்டான்விளை பார்க் ரோடு தொடங்கும் இடத்தில் போர்வெல் அமைக்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2,20,000/— ஐ குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 21766/2015/இ2

**தீர்மான எண் : 356 — <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

15. இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள Solar power plant –ல் இருந்து மின்சாரம் பெறப்பட்டு அதனை பயன்படுத்துவதற்கு உரிய ஒயரிங செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.99500/—க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>—1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 6444/2015/இ4

**தீர்மான எண் : 357 — <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

16. இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலக விஷயமாக வெளியூர் சென்று வருவதற்கு வழஙகப்படும் பயணப்படிக்கான தொகைகள் விதிமுறைகளின் படி அனுமதித்து வழஙக 2015—16 நிதி ஆண்டிற்கு உத்தேச செலவு தொகை ரூ.3,50,000/—ம் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

எனவே பணியாளர்கள் அலுவல் சம்பந்தமாக வெளியூர் சென்று வரும் பயணஙகளுக்கு பயணப்படி தொகையில் அவ்வப்போது வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 4723/2015/பி1

**தீர்மான எண் : 358 — <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

17. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் பூச்சாஸ்தான்குளக்கரை பகுதியில் உள்ள இரண்டு சின்டெக்ஸ் டேங்குகள் பழுதடைந்துள்ளதால் மேற்படி இடத்தில் இரண்டு சின்டெக்ஸ் டேங்குகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.30,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 5375/2015/இ2

**தீர்மான எண் : 359 – அனுமதிக்கப்பட்டது.**

18. நாகர்கோவில் நகராட்சியில் பெருகிவரும் மக்கள் தொகைகேற்பவும், நகராட்சி விரிவாக்கத்தில் 4 ஊராட்சி மற்றும் 1 பேருராட்சி இணைக்கப்பட்டுள்ளதால் நகராட்சியின் பரப்பளவு 49.10 ச.கீ.மீ உள்ளதாலும், நகரில் பாதாள சாக்கடை செயல்படுத்த முக்கிய அங்கமான தலைமை கழிவு நீரேற்றும் நிலையம் வலம்புரி விளை நகராட்சி உரக்கிடங்கில் அமைய உள்ளதாலும் உரக்கிடங்கிற்கான இடம் கூடுதலாக தேவைப்படுகின்றது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் கருத்துரையின்படி கூடுதலான இடம் குறித்து பல இடங்களில் இட ஆய்வு செய்யப்பட்டது. அவ்வாறு இடம் ஆய்வு செய்யப்பட்டதில் தோவாளை தாலுகா அழகியபாண்டிபுரம் கிராமம் புல எண்.50/1–ல் 10.73.000 ஹெக்டேர் அரசுபுறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டது. புல எண்.50/1–க்கு முறையான அணுகுசாலை உள்ளது. மேற்குறிப்பிட்ட பகுதியை சுற்றி எந்த குடியிருப்பும் இல்லை. நகராட்சி எல்லையிலிருந்து 20 K.M தூாரம் உள்ளது. மேற்படி இடத்தில் நவீன கலவை உரக்கிடஙகு அமைக்க தகுதியான இடம் என ஆய்வு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி இடத்தினை நவின கலவை உரக்கிடஙகு அமைக்க நில மாற்றம் செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>– மேற்படி இடத்தினை உரக்கிடஙகாக நில மாற்றம் செய்து தர மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 360 – அனுமதிக்கப்பட்டது.**

கோப்பு எண். 7492/2004/எப்1

19. நகராட்சி பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது தொடர்பாக Infrastructure and Amenities Fund நிர் வகித்து வரும் இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை சென்னை அவர்களிடம் உரிய பிரேரணை அனுப்பி நிதி பெற்று கொள்ளுமாறு இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை சைதாபேட்டை சென்னை அவர்கள் கடிதம் No/37172/2013/TU3 நாள் 05.01.2015 மாவட்ட ஆட்சித் தலைவர்/ தலைவர் DRDA நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பப்பட்டு மேற்படி திட்ட இயக்குநர் DRDA நாகர்கோவில் அவர்ளிடமிருந்து நகராட்சிக்கு கடிதம் ENdt No 5339/2014/A3 நாள் 22.01.2015 வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் பூஙகா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும், நகர சாலைகளில் பயணிகளுக்கு உதவும் வகையில் Board வைக்கவும் நெருக்கடியான உள்ள இடஙகளில் வாகன நிறுத்தம் அமைக்கவும் பாதசாரிகளுக்கு நடைபாதை அமைக்க கூடிய இடஙகளை ஆய்வு செய்து மதிப்பீடுகள் தயாரித்து திட்ட பிரேரணையை உருவாக்க கலந்தாலோசிகர் நியமிக்கவும் அதற்கான செலவுகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 4521/2015/எப்1

**தீர்மான எண் : 361 – அனுமதிக்கப்பட்டது.**

20. நாகர்கோவில் நகராட்சியில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் வார்டு வரைபடம் Auto CAD முறையில் இல்லை Manual முறையில் இருக்கும் வார்டு மற்றும் நகர வரைபடங்களை நவீனமயமாக்கி பல நோக்கு பயன்பாட்டிற்காக புவி இயல் தகவல் முறை சார்ந்த (GIS) வார்டு மற்றும் நகர வரைபடம் தயாரிக்கலாம் செயற்கை கோள் புகைப்படங்களை பயன்படுத்தி புதிய தொழில் நுட்பத்துடன் வார்டு வரைபடங்களை தயாரிப்பதன் மூலம் நகராட்சி பற்றிய தகவல்களை மிகவும் துல்லியமாக அறிவதுடன் நகராட்சியின் புதிய திட்டங்களை உருவாக்கவும் வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தவும், மிகவும் பயனுள்ளதாக இருக்கும் நகராட்சி மற்றும் வார்டு வரைபடங்களை பயன்படுத்தி ஒருங்கிணைந்த எதிர்கால பலநோக்கு பயன்பாட்டிற்கு அடிப்படையாக பயன்படுத்தி கொள்ளலாம். GIS செயற்கை கோள் தொழில் நுட்பத்துடன் நகராட்சியின் உடைமைகளான (Municipal Assets) முக்கிய சாலைகள் மருத்துவமனைகள் பொது கழிப்பறைகள், குளங்கள், ஆறுகள், ஏரிகள், மனைப்பிரிவுகள் நகராட்சி கட்டிடங்கள் மற்றும் அதற்கு தொடர்புடைய தகவல்கள் தொழில் நுட்பத்துடன் நகராட்சி வார்டு வரைபடம் மற்றும் நகர வரைபடம் மற்றும் நகர வரைபடம் தயாரிக்க கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்யவும் அதற்கான செலவுகளுக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 006201/2015/எப்1

**தீர்மான எண் : 362 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

21. இந்நகராட்சிக்குட்பட்ட A.R. கேம்ப் ரோட்டில் நகர புல எண்.K-1/33 -8,9,10–ல் அனுமதிக்கு மாறாக திரு. முருகன் என்பவர் கட்டிடம் கட்டுவதை தடை செய்ய கோரி திரு. இசபெல்லா என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) 4057/15 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளரை 2–ம் பிரதிவாதியாக்கி வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கினை மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் அவர்களிடம் ஒப்படைக்கவும், வழக்கிடை செலவுகள் மற்றும் வழக்கறிஞர் கட்டணத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 005320/2015/எப்1

**தீர்மான எண் : 363 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

22. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 K.P ரோடு கதவு எண்கள். 348,348A, 349 மற்றும் 350 ஆகிய கட்டிஙகளின் சொத்து வரியை குறைப்பது தொடர்பாக மேற்படி கட்டிடத்தின் உரிமையாளரான டாக்டர். ஜெயசீலன் மத்தியாஸ் அவர்களால் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாகக் கொண்டு தொடரப்பட்ட வழக்கு எண்.676/2009–க்கு நகர்மன்ற வழக்கறிஞர் திருமதி. S.S.ரெஜினி தேவி அவர்கள் ஆஜரானதற்கும் வழக்கிற்கு ஆன செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 16810/2009/அ5

**தீர்மான எண் : 364 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

23. நாகர்கோவில் நகராட்சி வார்டு எண்.31 திலகர் தெரு கதவு எண்.7/1, 7/2 வரிவிதிப்பு எண்.54673 மற்றும் 54674 கொண்ட கட்டிடஙகளுக்கு சொத்துவரி கூடுதலாக விதிக்கப்பட்டது என மேற்படி கட்டிடஙகளின் உரிமையாளரான டாக்டர். கல்யாண சுந்தரம் அவர்களால் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாகக் கொண்டு தொடரப்பட்ட வழக்கு எண்.410/2009 இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகர் மன்ற வழக்கறிஞர் திருமதி. ரெஜினி தேவி ஆஜரானதற்கும் மேற்படி வழக்கிற்கு ஆன செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 11433/2009/அ6

**தீர்மான எண் : 365 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

24. இந்நகராட்சிக்கு சொந்தமான அனாதைமடம் மைதனாத்தில் 18.04.2015 முதல் 45 நாட்கள் அரசுபொருட்காட்சி நடைபெற உள்ளதால் பொருட்காட்சியை காணவரும் பொதுமக்களின் வாகனஙகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 13.04.2015–ம் தேதி எலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் திரு.A.ஜெயபாலன், என்.வி. தெரு, கணேசபுரம் என்பவரால் ரு.70,700/–க்கு கேட்டு ஒரே ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பட்டது. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.70,700/– கடந்த ஆண்டு சர்க்கஸ் நிகழ்ச்சியின் போது பொதுமக்கள் வாகன நுழைவு கட்டண உரிமத்தொகை ரு.1,11,111/–ஐ விட குறைவாக உள்ளது. மேற்படி உரிமத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லையென்பதாலும், துறை மூலம் வசூல் செய்தாலும் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதாலும் மற்றும் அரசு பொருட்க்காட்சி முதல்முறையாக நடைபெறவுள்ளதால் வாகனஙகளின் வரவு கணிக்க இயலாது என்பதை கருதியும் மேற்படி திரு. .A.ஜெயபாலன் என்பவரது ரூ.70,700/–க்கான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று உரிமத்தொகை ரூ.70,700/– வருமான வரி ரு.1414/– , சேவைவரி ரூ.8739/–, தொழில்வரி ரு.880/– பெறப்பட்டு உரிமம் உத்தரவு வழஙகி ஒப்படைக்கப்பட்டதற்கும். தினசரி நாளிதழில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை விளம்பரம் செய்த வகைக்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 26072/2012/அ14

**தீர்மான எண் : 366 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

25. திரு. T.முகேஷ் த/பெ தமிழ்செல்வன் என்பவர் தனது தந்தை நாகர்கோவில் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணியாற்றி பணியிடை 20.03.2002–ல் காலமானார். அன்னாரது வாரிசு வேலை வேண்டி மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு W.P.(MD) No. 3302/2012 ஆகும்.

மேற்படி வழக்கு மேல் முறையீடு செய்ய மதுரை உயர்நீதி மன்ற கிளை வழக்கறிஞர் திரு. P.ஆதிமூலபாண்டியன் அவர்களின் கடிதம் நாள்.27.03.2015–ல் ரூ.25000/– வழஙக கோரியுள்ளார்கள் அதனை வழஙகவும் மற்றும் வழக்கிற்கான அனைத்து செலவீனத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– 1. அனுமதிக்கலாம்.

2. அரசு வழக்கறிஞர் திரு. P.ஆதிமூலபாண்டியன் அவர்கள் கோரிய வழக்கு செலவுத்தொகை ரூ.25,000/– மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி வழஙகலாம்.

கோப்பு எண். 2891/2006/எச்1

**தீர்மான எண் : 367 – அனுமதிக்கப்பட்டது.**

26. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47–ல் கணபதிநகர் குறுக்குத்தெரு மிகவும் பழுதடைந்துள்ளதால் அத்தெருவில் கான்கிரீட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரு.1,30,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1) அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 7316/2015/இ1

**தீர்மான எண் : 368 – அனுமதிக்கப்பட்டது.**

27. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28–ல் டிஸ்லரி ரோடு உடுப்பி உணவகத்திற்கு முன் பக்கம் சாலை மோசமாக காணப்படுவதால் அதில் தார்பேட்ச் ஒர்க் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரு.98,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அவசர அவசியம் கருதி நக்ாமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 6653/2015/இ1

**தீர்மான எண் : 369 – அனுமதிக்கப்பட்டது.**

28. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் கலுஙகடி புளியடி ரேசன் கடைஅ ருகில் உள்ள பம்ப்ரூம் மற்றும் கிணறு பழுதடைந்து காணப்படுவதால் அதனை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20112/2014/இ2

**தீர்மான எண் : 370 – அனுமதிக்கப்பட்டது.**

29. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.41–ல் குருசடி ஆலயத்தின் முன்புறம் பின்புறம் உள்ள போர்வெல் சுத்தப்படுத்தவும், குடிநீர் குழாய் நீட்டிக்கவும் உள்ள பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1) திரு. S. சுப்பையா – 0.02% குறைவு

**அலுவலக குறிப்பு–** ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரார் திரு. S. சுப்பையா என்பவர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.102/2014–15/இ2

**தீர்மான எண் : 371 – அனுமதிக்கப்பட்டது.**

30. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் வடிவீஸ்வரம் சன்னதி தெரு நடராஜபுரம் இடத்தில் அமைந்துள்ள பம்புரூம் மற்றும் மின் மோட்டார் சரி செய்யும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1) திரு. ஜெயபிரிய Traders – 0.11% குறைவு
2) திரு. T.ராஜேந்திரன் – 2.11% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>**– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. T.ராஜேந்திரன் 2.11% குறைவை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.290/2014–15/இ2

**தீர்மான எண் : 372 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

31. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளாகிய காட்டுநாயக்கர் தெரு, செட்டிதெரு, சவேரியார் கோவில் சந்திப்பு மற்றும் வடிவீஸ்வரம் மேற்கு ரதவீதியில் வால்வு அமைக்கவும், குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்யவும் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்குபட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1) திரு. நடராஜன் – 0.002% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>**– ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. நடராஜன் என்பவர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.106/2014–15/இ2

**தீர்மான எண் : 373 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

32. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32–ல் அண்ணா பேருந்து நிலையத்தில் 2 Ro Plant அமைக்க நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்புநோக்குபட்டியல்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1) Ecopure Water Treatment – 3.90% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>**– ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனம் Ecopure Water Treatment மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.291/2014–15/இ2

**தீர்மான எண் : 374 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

33. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.45–ல் கல்கோவில் சாலை பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நிறைவடைந்துள்ளதால் மேற்படி இடத்தில் தார்தளம் அமைக்க நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1) திரு. கைலாஷ் குமார் – 18.57% குறைவு
2) திரு. S..தியாகராஜன் – 4.32 % குறைவு
3) திரு. M.M. கிளீட்டஸ் – 2.36 % அதிகம்
4)

**அலுவலக குறிப்பு**– 1) வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. K.. கைலாஷ் குமார் என்பவர் மதிப்பீட்டைவிட 18.57 % குறைவாக கொடுத்துள்ளதால் முன் வைப்பத்தொகை ரூ.2,16,000/–ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழஙக அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகப்பட்டதை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.163/2014–15/இ1

**தீர்மான எண் : 375 – அனுமதிக்கப்பட்டது.**

34. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் அழகம்மன் கோவிலில் மாசித் திருவிழா நடைபெற இருப்பதால் ரதவீதிகளில் தார்பேட்ச் ஒர்க் செய்ய நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1) திரு. P. இசக்கிமுத்து – 14.99 % குறைவு
2) திரு. M..மரியஜாண் – 12.00 % குறைவு
3) திரு. S. ஜேம்ஸ்தஙகராஜ் – 0.11 % குறைவு
4)

**அலுவலக குறிப்பு**– வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.P. இசக்கிமுத்து என்பவர் மதிப்பீட்டைவிட 14.99% குறைவாக கொடுத்து, கூடுதல் முன் வைப்புத்தொகை ரூ.9600/– செலுத்தப்பட்டுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.272/2014–15/இ1

**தீர்மான எண் : 376 – அனுமதிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 4 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல் பம்புசெட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.71,400/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | <u>வார்டு எண் 19 சரக்கல்விளை விவேகானந்தர் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u><br>5 குதிரை வேக "(4) "சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | ரூ 15,400/– |
| II | <u>வார்டு எண் 20 சி.றி.எம் புரம் போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (வண்ணார மாடன் கோவில் பக்கம்</u><br>7.5 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 19050/– |

| | | |
|---|---|---|
| III | <u>வார்டு எண் 20 செட்டித்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (அரசு உயர்நிலைபள்ளியின் அருகில்)</u><br>5 குதிரை வேக "(4) ''சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் . | 12750/– |
| IV | <u>வார்டு எண் 36 ஈத்தாமொழி ரோடு முதலியார்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u><br>பழுதுபட்டு போரில் ஜாமாகியுள்ள 5 குதிரை வேக "(6) ''பம்புசெட்டை தூக்க போர்பிளசிங செய்து தூக்கி பம்புசெட், , ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 24200/– |
| | **மொத்தம்** | 71,400/– |

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 006704/2015/இ2

**தீர்மான எண் : 377 – அனுமதிக்கப்பட்டது.**

36. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 4 இடங்களிலுள்ள குடிநீர் போர்வெல் பம்புசெட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.67,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | <u>வார்டு எண் 12 சபையார் குளம் (புளியமரம் பக்கம்) போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u><br>1.5 குதிரை வேக "(4) ''சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | ரூ<br>10,450/– |
| II | <u>வார்டு எண் 19 வேதநகர் சானல்கரை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u><br>7.5 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 16550/– |
| III | <u>வார்டு எண் 20 செட்டித்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u><br>போரில் ஜாமாகியுள்ள 10 குதிரைவேக பம்புசெட்டை போர்பிளசிங செய்து தூக்கிவிட்டு, பழுதுபட்ட பைப் கேபிளை மாற்றி போரில் இறக்கி இயக்குதல். | 33900/– |
| IV | <u>வார்டு எண் 38 வட்டவிளை குடிநீர் விநியோகம்</u><br>உயர்நிலை டேஙகின் 3" டெலிவரியைப் பழுது பார்த்து இயக்குதல். | 6100/– |
| | **மொத்தம்** | 67000/– |

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம். கோப்பு எண். 006705/2015/இ2

**தீர்மான எண் : 378 – அனுமதிக்கப்பட்டது.**

37. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 6 இடங்களிலுள்ள குடிநீர் போர்வெல் பம்புசெட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.73,850/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | <u>வார்டு எண் 5 வாத்தியார் விளை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (மீன் கடை பக்கம்)</u><br>5 குதிரை வேக "(6) ''சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | ரூ<br>14,000/– |

| | | |
|---|---|---|
| II | **<u>வார்டு எண் 21 வடக்கு சூரன்குடி போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் II</u>**<br>பழுதுபட்ட 5 குதிரை வேக “(6) “ பம்புசெட்டை தூக்கிவிட்டு போர் பிளசிங செய்து புதிய 3 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்புசெட் இறக்கி இயக்குதல். | 11800/– |
| III | **<u>வார்டு எண் 39 கலைநகர் றி.வி.கே. நகர் போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (உள்ளாலுள்ள போர்)</u>**<br>7.5 குதிரை வேக பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 3400/– |
| IV | **<u>வார்டு எண் 43 நேசமணி நகர் ராஜபாதை போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>10 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து கூடுதல் பைப் இறக்கி இயக்குதல். | 20600– |
| V | **<u>வார்டு எண் 43 நேசமணி நகர் ஆசாரிபள்ளம் ரோடு போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (சர்ச்க்கு கீழ் பக்கம்)</u>**<br>3 குதிரை வேக “(4) “ சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 12400/– |
| VI | **<u>வார்டு எண் 50 கார்மல் மவுண்ட் ரோடு போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>3 குதிரை வேக “(4) “ சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 11650/– |
| | **மொத்தம்** | 73850/– |

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 006706/2015/இ2

**தீர்மான எண் : 379 – <u>அனுமதிக்கப்பட்டது</u>.**

38. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கடிதத்தில் கடன் பெறுவதற்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | சரலூர் மீன்சந்தையில் புதிதாக கடைகள் கட்டுதல் | ரூ.83.60 |
| 2 | வடசேரி காய்கறி சந்தையின் முன்புறம் உள்ள பழைய கடைகளை இடித்துவிட்டு புதிய கடைகள் கட்டுதல் | ரூ.280.00 |
| 3. | வடசேரி நயினார் கட்டிடத்தை இடித்து புதிதாக கடைகள் கட்டுதல் | ரூ.280.00 |
| 4 | வடசேரி சந்தையில் புதிதாக கடைகள் கட்டுதல் | ரூ.270.00 |
| | மொத்தம் | **ரூ.913.60** |

மேற்படி வேலைகளுக்கு TUFIDCO நிறுவன கடிதம் எண்.55/2015–2016 நாள் 07.04.2015–ல் TUFIDCO Infrastructure Fund Scheme –ல் 11% வட்டியில் கடனாகப் பெற சம்மதம் தெரிவித்து மன்ற தீர்மானம் வழஙக கேட்கப்பட்டுள்ளது. அதன்படி 11% வட்டியுடன் கடன் தொகை திரும்ப செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ3/19657/2012

**தீர்மான எண் : 380 – <u>அனுமதிக்கப்பட்டது</u>.**

39. நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணை மற்றும் மார்த்தால் நீரேற்று நிலையங்கள், தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம், நகராட்சி அதிகாரிகள் குடியிருப்பு மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகியவற்றிற்கு காவலர் பகல் மற்றும் இரவு பணிக்கும், மொத்தம் 10 முன்னாள் இராணுவத்தினரை பணியமர்த்த நகர்மன்ற தீர்மானம் எண்.259 நாள் 10.04.2015–ல் மன்ற அனுமதி பெற்று டெக்ஸ்மோ நிறுவனம், திருநெல்வேலிக்கு கடிதம் முன்னாள் இராணுவத்தினரை பணிபுரிய பட்டியல் அனுப்பி தர கடிதம் அனுப்பப்பட்டது. இதுநாள் எந்த பதிலும் வராததால் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் மூலம் 8 மணி நேரம் பணிபுரிய அரசு சட்டத்திற்குட்பட்டு 12 நபர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி தற்காலிக பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு –அனுமதிக்கலாம் கோப்பு எண்.3280/2015/இ2

**தீர்மான எண் : 381 – அனுமதிக்கப்பட்டது.**

40. நாகர்கோவில் நகராட்சி முதல் நிலை (Primary Collection ) இரண்டாம் நிலை (Secondary Collection) குப்பைகள் சேகரிப்பதற்கு தேவையான வாகன வசதிகள் மற்றும் குப்பை மாற்றும் நிலையம் (Transfer Station) அமைக்க விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்ய ஒப்பந்தப்புள்ளி 21.04.2015–ல் கோரப்பட்டது. கீழ்காணும் ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டார்கள்.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Sustanable Enviro Promotors trichy | 4,70,000 |
| 2 | Sewel Environmental Assosiation –Banrutty | 4,90,000 |

மேற்படி கலந்துக் கொண்டவர்களில் குறைவான தொகை குறிப்பிட்ட வரிசை எண்.1 Sustanable Enviro Promotors trichy என்கிற நிறுவனத்திற்கு ஒப்பந்த உரிமை (DPR) விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய “A” வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது. மேற்படி திட்டம் தொடர்பான “B” செலவீனங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பி – A அனுமதிக்கலாம்
B அனுமதிக்கலாம்

கோப்பு எண்.3282/2015/எச்.1

**தீர்மான எண் : 382 – அனுமதிக்கப்பட்டது.**

41. இந்நகராட்சிக்குட்பட்ட வாகையடி கிழக்கு ரதவீதி சர்வே எண்.R8/21 இடத்தில் அமைந்துள்ள ரைஸ்மில்லின் அடிப்பகுதி வழியாக ஊடும் கழிவு நீர் ஓடையை மாற்ற கோரி ரைஸ்மில்லின் உரிமையாளர் திரு ஜி.பெரியசாமி என்பவரால் ஓ.எஸ்.218/06 தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் நகராட்சிக்கு எதிராக தீர்ப்பு வரப்பெற்றது. மேற்படி தீர்ப்புரையின் மீது நகராட்சி சார்பில் மேல்முறையீடு AS 44/2010 தொடரப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழுங்கப்பட்டது. மேற்படி தீர்ப்புரையை எதிர்த்து வாதியினால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் இரண்டாம் மேல்முறையீடு வழக்கு SA(MD) 80/2011 தொடரப்பட்டு 17.07.2013–ல் தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. தீர்ப்புரையில் மனுதாரரின் பட்டாவினை பரிசீலித்து இறுதி உத்தரவிட மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கீழ் நீதிமன்றம் வழக்கு ஓ.எஸ்.219/2006–ல் வாதிக்கு சாதகமாக T.S.No.R8/21 உள்ள ஓடையை அப்புறப்படுத்த தொடர்ந்த நிறைவேற்று

மனு E.P. 8/2014 நிலுவையில் உள்ளது. மேற்படி ஓடை சுமார் 100 வருடஙகளுக்கு மேலாக ஓடிக்கொண்டு இருக்கின்றது. அதனை மாற்றியமைப்பதில் நடைமுறை சாத்தியகூறுகளும் குறைவாகவே உள்ளது. எனவே உயர்நீதிமன்ற வழக்கு SA 80/2011 –ல் பட்டாவை ரத்து செய்வதை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மீது மேல்நடவடிக்கைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மேற்கண்ட TS No.R8/21 –யை பரிசீலித்து உரிய உத்தரவு வழஙக கேட்டுக் கொள்ளலாம்.

கோப்பு எண்.1854/2007/எப்.2.

**தீர்மான எண் : 383 – அனுமதிக்கப்பட்டது.**

42. இந்நகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலைய அணுகுசாலை நுழைவு பகுதியில் புல எண்.E11/2-3 –ல் பரப்பளவு 0.01.045.672 ஹெக்டேர் வருவாய் ஆவணஙகளில் நகரமனை என உள்ளது திரு கே.வாசுதேவன் த/பெ.குஞ்சு வடசேரி கிராமம் அகஸ்தீஸ்வரம் தாலுகா என்பவர் நாகர்கோவில் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் ஓ.எஸ்.140/2000 வழக்கு தாக்கல் செய்து அதன் மூலம் இம்மனையின் உரிமை மற்றும் கைவசம் இருப்பு சம்மந்தமாக டிகிரி பிறப்பிக்கவும், மற்றும் வாதியின் சொத்துக்கு assignment பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டியுள்ளார். பட்டிகை சொத்து TS No.E11/2-3 நாகர்கோவில் கிராமம் பரப்பளவு 0.01.045.672 ஹெக்டேர் என்றும் நகரமனை மற்றும் வரிவிதிப்பு செய்யப்பட்ட உபயோகமற்ற புஞ்சை எனவும், கிராம பதிவேட்டில் பிரிவினை செய்யப்பட்டுள்ளது. வாதி வாசுதேவன் இந்த தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து அதில் ஒரு கட்டிடமும் கட்டி முடித்து அதில் வியாபாரம் செய்து வருகிறார். மேலே தெரிவித்த ஆக்கிரமிப்புக்கு நில ஆக்கிரமிப்பு சட்டம் ( L.EAct) –ன் படி அந்த நபர் மீது “B” மெமோ பதிவு செய்யப்பட்டுள்ளது. 11.03.2000–ல் நாகர்கோவில் வருவாய் துறை கோட்டாட்சியர் மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் சேர்ந்து அந்த ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எடுத்தனர். எனவே வாதி நீதிமன்றத்தை அணுகி தடை உத்தரவு பெற்றுள்ளார்.

வருவாய் துறை கோட்டாட்சியர் நாகர்கோவில் அவர்களின் உத்தரவு எண்.A1/2784/1994 –ன் படி தாவா சொத்துக்குரிய மதிப்பு ரூ.15000 செலுத்தியதன் அடிப்படையில் 27.08.2003–ல் ஓ.எஸ்.எண்.140/2000 வழக்கு வாதிக்கு சாதகமாக டிகிரி ஆகியுள்ளது.

Trail Court - ன் உத்தரவு மீது அரசு முதன்மை கூடுதல் சப்கோர்ட் நாகர்கோவில் மூலம் மேல்முறையீடு வழக்கு A.S.127/2003-ல் தாக்கல் செய்து 30.04.2004–ல் கீழ் கோர்ட்டின் டிகிரியை உறுதி செய்து வழக்கினை தள்ளுபடி செய்தது.

இரண்டாவது மேல்முறையீடு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை பெஞ்சின் முன்பாக SASR-47649/2005 –ல் பரிசீலனை செய்து SA No.103/2008 வழக்கு அரசு தாக்கல் செய்தது மீது மதுரை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. பின்னர் வாதி கருவூலத்தில் செலுத்தியதாக தாக்கல் செய்த செல்லான் எண்ணும் மற்றும் இதர விபரஙகள் உண்மையில்லை என்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே உயர்நீதிமன்ற SA No.103/2008- க்கு எதிராக SLP தாக்கல் செய்யப்பட்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம் 07.03.2014–ல் தள்ளுபடி செய்தது.

மேற்குறிப்பிட்ட இடைவெளியில் வாதி ஓ.எஸ்.140/2000–ன் தீர்ப்புரை மீது நிறைவேற்ற மனு EP No.277/2005 மூலம் தாவா சொத்திற்கு பட்டா வேண்டி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி கட்சியாக இல்லை. தாவா சொத்தின் மீதான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட தலைவர் அவர்களின் அலுவலகத்தில் எடுக்கப்பட்டதாகும். தாவா சொத்து மற்றும் இவ்வழக்கு தொடர்பான விபரங்கள் ஏதும் நகராட்சியின் கவனத்திற்கு வரப்பெறவில்லை. மேற்படி தாவா சொத்து "நகரமனை" யிடமாக இருப்பது மட்டுமன்றி பேருந்து நிலைய அணுகுசாலையின் விரிவாக்க பகுதியாக அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். XXIII உள்ளது. மேற்படி சாலை விரிவாக்கம் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் மிகவும் அத்தியாவசியமானதாக உள்ளதால் மேற்படி வழக்கில் நகராட்சி பிரதிவாதியாக சேரவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி பிரதிவாதியாக சேர்ந்துள்ளது.

மேற்படி புல எண். E11/2-3 பரப்பளவு **0.01.045.672** ஹெக்டேர் பகுதி பொதுமக்கள் நலன் கருதியும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு சாலை விரிவாக்கம் மிக அத்தியாவசியமாக உள்ளதால் மேற்படி இடத்திற்கு பட்டா வழஙகக்கூடாது எனவும் மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி நகராட்சிக்கு ஒப்படைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை கேட்டுக் கொள்ளவும் மேலும் இவ்வழக்கில் நகராட்சி சார்பில் வாதாடும் வழக்கறிஞர் கட்டணம் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். கோப்பு எண்.**10591/2014**/எப்.**1.**

**தீர்மான எண் : 384 – அனுமதிக்கப்பட்டது.**

**43.** இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி மீன்சந்தையினை நவீன முறையில் புதியதாக கட்டும் பணி நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ளது. மேற்படி மீன் சந்தையில் 2x **1.60** மீட்டர் அளவீட்டில் உள்ள **56** எண்ணம் கடைகள், அலுவலக அறை ஒன்று மற்றும் குளிர்சாதன பாதுகாப்பு அறை ஆகியவற்றிற்கு இந்நகராட்சி உதவிபொறியாளரது அறிக்கையில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வடசேரி தினசரி மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்தல் உரிமத்திற்கு கீழ்கண்ட அட்டைவணைப்படி கட்டணம் வசூல் செய்திட திருத்தம் செய்து வெளியிடவும் மற்றும் சிறப்பு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வடசேரி தினசரி மீன் சந்தை கட்டணம் வசூல் செய்யவேண்டிய விபரம்**

**அட்டவணை**

| வ.எண் | இனம் | கட்டணம் ரூ | காலம் |
|---|---|---|---|
| 1. | ஒரு வணிகருக்கு கடை ஒன்றுக்கு | 150 | நாள் ஒன்றுக்கு |
| 2. | பாரம் இல்லாமல் வரும் மிதி வண்டி ஒன்றுக்கு | 15 | ஒரு தடவைக்கு |
| 3. | பாரம் இல்லாமல் வரும் மூன்று சக்கர வாகனம் ஒன்றுக்கு | 25 | ஒரு தடவைக்கு |
| 4. | பாரம் இல்லாமல் வரும் நான்கு சக்கர வாகனம் ஒன்றுக்கு | 50 | ஒரு தடவைக்கு |
| 5. | பாரத்துடன் வரும் மிதிவண்டி, மூன்று சக்கர வாகனம், நான்கு சக்கரவாகனம் மற்றும் கைவண்டி ஒன்றுக்கு | 50 | பெட்டி ஒன்றுக்கு |
| 6. | முதுகு சுமை,. தலைச்சுமை | 50 | பெட்டி ஒன்றுக்கு |
| 7. | பாரம் இல்லாமல் வரும் கைவண்டி ஒன்றுக்கு | 15 | ஒரு தடவைக்கு |
| 8. | குளிர்சாதன அறையில் மீன்கள் பாதுகாக்கப்படும் பெட்டிகள் ஒன்றுக்கு | 60 | நாள் ஒன்றுக்கு (24 மணிநேரம்) |

## நாகர்கோவில் நகராட்சி வடசேரி தினசரி மீன் சந்தைக்கான சிறப்பு கட்டுப்பாடுகள்

1. வடசேரி தினசரி மீன் சந்தையின் உரிமை ஆணை பற்றி இப்பொழுது இருக்கும் விதிகளுக்கும் அரசால் மற்றும் ஆணையரால் அப்போதைக்கு அப்போது விதிக்கப்படும் உத்தரவுகளுக்கும் இனிமேல் ஏற்படுத்தப்படும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அட்டவணையில் கண்டுள்ள கட்டணங்களை மட்டுமே வசூலிக்கவேண்டும்.
2. வடசேரி தினசரி மீன் சந்தைக்கு வெளியில் இருக்கும் இடஙகளில் விற்பனை செய்வோரிடம் உரிமையாணை பெற்றவர் எக்காரணத்தை கொண்டும் கட்டணம் வசூலிக்ககூடாது.
3. உரிமையாணைப்பெற்றவர் அட்டவணையில் கண்டுள்ளபடி இனஙகளுக்கு கட்டண விபரம் குறிப்பிட்ட பற்றுச்சீட்டு தனித்தனியாக அச்சிட்டு நகராட்சி முத்திரை பதித்து வழஙகப்படவேண்டும்.
4. வடசேரி மீன் சந்தை காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்து வைக்கப்படும். சந்தையில் வைக்கப்பட்டிருக்கும் கட்டணஙகள் எழுதப்பட்ட அறிவிப்பு பலகையை உரிமைதாரர் தனது சொந்த செலவில் எழுதி பொதுவான இடத்தில் பொது மக்கள் பார்வையிடும் விதமாக தொஙகவிட்டு பாதுகாக்கவேண்டும்.
5. கண்ணாடி மூடிய விளக்குகளையே சந்தைக்குள் பயன்படுத்தவேண்டும்.
6. வடசேரி தினசரி மீன் சந்தைக்குள் ஆணையர் ஏதேனும் பொருட்களை அவைகளுக்கு தனியாக ஏற்பட்ட இடஙகளிலாவது குறிப்பிட்ட இடத்திலாவது விற்க நிர்ணயித்தால் உரிமையாணை பெற்றவர் அதற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.
7. எதிர்பாராத விதமாக ஏற்படும் கலகம், தீ விபத்து, தடுக்க முடியாத தொற்று நோய் காலஙகளில் மற்றும் தவிர்க்க முடியாத காரணஙகளினால் தற்காலிகமாக சந்தை மூட சொல்வதற்கு ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அப்படிப்பட்ட காலத்திற்கு உரிமையாணை பெற்றவருக்கு யாதொரு இழப்பீடும் கேட்க உரிமை இல்லை.
8. சீர்திருத்தத்தின் காரணத்திற்காக நகராட்சியில் உரிமையாணை பெற்றவருக்கு ஏற்படும் வசதி குறைவுக்கு யாதொரு இழப்பீடும் உரிமையும் கேட்க உரிமையில்லை.
9. நகராட்சி அனுமதியின்றி சந்தைக்குள் தற்காலிகமாகவோ, நிலையாகவோ எவ்வித கட்டிடஙகளும் கொட்டகைகளும் கட்டக்கூடாது. அவ்வாறு செய்தால் நகராட்சியால் காலி செய்யப்பட்டு அதற்காக ஏற்படும் கூடுதல் செலவு வசூல் செய்யப்படும்.
10. உரிமையாணை பெற்றவர் எக்காரத்தைக்கொண்டும் அட்டவணையில் கண்ட கட்டணத்திற்கு கூடுதலாக வசூல் செய்யக்கூடாது. அவ்விதம் வசூல் செய்யவதாக சந்தை வணிகர்களிடமிருந்து எதாவது புகார் வந்தால் உர்மையாணை பெற்றவர் பேரில் நகராட்சி மூலமாகவும் கிரிமினல் தரப்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் உர்மையாணை ரத்து செய்து உரிமையை மறு ஏலம் போடப்படும். அதனால் ஏற்படும் கூடுதல் நஷ்டத்திற்கு உரிமைதாரரை பொறுப்பாக்கப்படும்.
11. கடைகளை எந்த வாணிபத்திற்கு பயன்படுத்தப்படுகிறதோ அதைதவிர வேறு பயன்பாடுக்காகவோ குடியிருப்புக்காகவோ பயன்படுத்தக்கூடாது.

12. தொழு நோய் உள்ளவர்களையும் பிற தொற்றுநோய் உள்ளவர்களையும் சந்தைக்குள் அனுமதிக்கக்கூடாது.
13. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இன்றி மீன்களை ஒழுங்காக வைத்து விற்பனை செய்யவேண்டும். இதற்கு ஆணையரோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவரோ வழி எந்த முறையில் இருக்க வேண்டுமென்று கூறுகிறாரோ அதையே வழியாக ஏற்க வேண்டும்.
14. சந்தையை உரிமைதாரரே தனது சொந்த செலவில் பராமரிக்கப்படவேண்டும். தினசரி சந்தையில் சேரும் குப்பைகளை அகற்றி அதனை நகராட்சி உரக்கிடங்களில் சேர்க்கப்படவேண்டும். குப்பைகளை நாள்தோறும் அபப்றப்படுத்த வேண்டும். அதனை சந்தைக்குள் சேர்த்து வைத்தல் கூடாது. இதற்கு நகராட்சியிலிருந்து எந்தவித தொகையும் வழஙகப்படமாட்டாது.
15. வடசேரி தினசரி மீன் சந்தைக்கு கொடுக்கப்பட்டுள்ள கடைகள், அலுவலக அறை, குளிர்சாதன பாதுகாப்பு அறை உட்பட அனைத்து மின் இணைப்புகளுக்கும் மின்வாரியத்திற்கு செலுத்தவேண்டிய மின் கட்டணஙகளை உரிமையாணை பெற்றவர் நகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் மீட்டர் கார்டில் குறிப்பிட்டவாறு தொகையை அந்தந்த மாதஙகளில் மின் வாரியத்தில் செலுத்தப்படவேண்டும். மேலும் மின் இணைப்புகள் தொடர்பான கூடுதல் வைப்புத்தொகைகள் மற்றும் இதர தொகைகள் எதுவாயினும் உரிமைதாரரே மின் வாரியத்தில் செலுத்தவேண்டும். இதற்கு நகராட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது. மின்வாரிய நிபந்தனைகளின்படி அந்தந்த மாதம் செலுத்ததவறினால் ஏற்படும் விளைவுகளுக்கு உரிமையாணைப்பெற்றவரே பொறுப்பாவார்.
16. வடசேரி தினசரி மீன் சந்தைக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புக்கு உரிமைதாரர் மின் இணைப்பு பொறுப்புத் தொகை ரூ.5,00,000/–த்தை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெறுவதற்கு முன்னால் நகராட்சி கருவூலத்தில் முன் வைப்புத்தொகை பணமாக செலுத்தவேண்டும். அல்லது Demand Draft –மூலம் செலுத்தவேண்டும்
17. வடசேரி மீன் சந்தையில் உள்ள மின் கம்பஙகளில் மற்றும் மீன் சந்தை வளாகத்தில் உள்ள அனைத்து மின் விளக்குகளுக்கான மின் கட்டணம் உரிமம் பெற்றவேரே மின்வாரியத்தில் நேரடியாக செலுத்தவேண்டும்.
18. வடசேரி தினசரி மீன் சந்தை உரிமம் 2015–16–ம் ஆண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் உள்ள அனைத்து பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
19. வடசேரி தினசரி மீன் சந்தையில் உள்ள குளிர்சாதன பாதுகாப்பு அறை சம்மந்தப்பட்ட எந்திரஙகள் மற்றும் உபகரணஙகள் யாவும் உரிய முறையில் உரிமதாரரால் பராமரிக்கப்படவேண்டும். முறையாக பராமரிக்கப்படாமல் ஏற்படும் தடஙகல்களுக்கு உரிமதாரரே பொறுப்பாவார் என்பதுடன் இழப்புகளுக்கு உரிமதாரரின் பொறுப்பு தொகையில் ஈடுகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
20. மீன் சந்தை வளாகம் மற்றும் குளிர்சாதன பாதுகாப்பு அறை சுகாதார கேடுகள் இன்றி எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். மீன் கழிவுகளை உரிமதாரர் சொந்தபொறுப்பில் அகற்றவேண்டும் இதனால் பொது மக்களுக்கு எந்தவிதத்திலும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது.

21. குளிர்சாதன பாதுகாப்பு அறையினை ஆய்வு செய்யவரும் நகராட்சி அலுவலர்கள் மற்றும் உயர் அலுவலர்களை எந்த நேரத்திலும் அனுமதிக்கவேண்டும். குளிர்சாதன பாதுகாப்பு அறை தொடர்பாக தெரிவிக்கும் அறிவுரைகளை உடனே பின்பற்றவேண்டும்.
22. குளிர்சாதன பாதுகாப்பு அறை தொடர்பான எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் யாவும் நல்ல நிலையில் உள்ளதா என்பதையும் எவ்வாறு செயல்படுத்தவேண்டும் என்பதையும் உரிமம் ஏற்றெடுக்கும்போது நகராட்சி உதவிபொறியாளர்கள், மற்றும் பொறியாளர் முன்னிலையில் சரிபார்த்து தெரிந்துகொள்ளவேண்டும் என்பதுடன் உரிமம் காலம் முடிவடைந்து நகராட்சி வசம் ஒப்படைக்கும்போது மேற்படி பொறியாளர்களால் ஆய்வு செய்யும் நிலையில் முறையற்ற செயல்பாட்டால் ஏதேனும் நிதி இழப்பு ஏற்படும் நிலை இருப்பின் உரிமைதாரரிடம் ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
23. உரிமைத்தொகை முழுவதும் ஒரே தவணையில் செலுத்தவேண்டும் என்பதுடன் வருமானவரி, சேவைவரி மற்றும் தொழில் வரியினை உரியவாறு செலுத்தவேண்டும்.

**<u>அலுவலக குறிப்பு</u>–** வடசேரி தினசரி மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்தல் உரிமத்திற்கு அட்டவணையில் கண்டவாறு கட்டணம் வசூல் செய்திடவும் மற்றும் சிறப்பு கட்டுபாடுகளை திருத்தம் செய்து வெளியிட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21003/2014/அ14

**தீர்மான எண் : 385 – வரிசை எண்.1.ல் உள்ள இனத்திற்கு ரூ.150/– என்பதை ரூ.100/– எனவும், மற்றும் வரிசை எண்.2, 3, 4, 5, 6, 7 மற்றும் 8–ல் கண்டுள்ள இனஙகளுக்கு அதே தொகையினை வசூல் செய்யவும் மன்றத்தில் தீர்மாணிக்கப்பட்டது. மேலும் மீன் சந்தைக்கு வரும் பொது மக்களின் வாகனஙகளுக்கு எந்தவித வாகன கட்டணமும் வசூல் செய்யக்கூடாது. வணிக பயன்பாட்டில் மீன் சந்தைக்கு வரும் வாகனஙகளுக்கு மட்டுமே இந்த கட்டணம் பொருந்தும் எனவும் மேலும் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணத்தைவிட கூடுதலாக வசூல் செய்தால் குத்தகைதாரரின் குத்தகை ரத்து செய்யப்படும் எனவும் மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

44. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34–ல் குறுந்தெரு பூஙகா முன்பக்கத்திலுள்ள பம்ப்ரூம் மிகவும் பழுதடைந்துள்ளதால், அதன் அருகில் வேறு பம்ப் ரூம் கட்டுவதற்கும், பஜனைமடம் தெருவிற்கு மெயின் குழாய் இல்லாத காரணத்தால் மெயின் குழழய் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,50,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 7584/2015/இ2

**தீர்மான எண் : 386 – அனுமதிக்கப்பட்டது.**

45. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி நவீன தினசரி மீன் சந்தை வளாகத்தினுள் அமைந்துள்ள கழிப்பிடம் மற்றும் குளியலறையினை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் பொருட்டு மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் உள்ளடக்கி ஒரே குத்தகை இனமாக கொண்டு மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமதாரரே கழிப்பறை மற்றும் குளியலறையை பராமரித்து கீழ்கண்ட சிறப்பு கட்டுப்பாடுகள் மற்றும் அட்டவணைபடி கட்டணம் வசூல் செய்திடவும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**கழிவறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூல் செய்யவேண்டிய விபரம்**

**அட்டவணை**

| வ. எண் | இனம் | கட்டணம் ரூ | காலம் |
|---|---|---|---|
| 1 | சிறுநீர் கழித்தல் மட்டும் | இலவசம் | – |
| 2. | கழிவறை பயன்படுத்துதல் | 3 | ஒரு முறை |
| 3. | குளியலறை பயன்படுத்துதல் | 5 | ஒரு முறை |

**சிறப்பு கட்டுப்பாடுகள்**

1. கழிவறை மற்றும் குளியலறையினை சந்தை செயல்படும் நேரத்தில் திறந்து வைக்கவேண்டும்.
2. மின் கட்டணங்களை உரிமையாணை பெற்றவர் நகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் மின் கட்டண கார்டில் குறிப்பிட்டவாறு அந்தந்த மாத்ஙகளில் மின் வாரியத்தில் செலுத்தவேண்டும். மேலும் மின் இணைப்பு தொடர்பான கூடுதல் வைப்பத்தொகை மற்றும் இதர தொகைகள் எதுவாயினும் உரிமதாரரே மின்வாரியத்தில் செலுத்தவேண்டும் மின்வாரிய நிபந்தனைகளின்படி மேற்படி கட்டணங்கள் செலுத்த தவறினால் ஏற்படும் விளைவுகளுக்கு உரிமையாணை பெற்றவரே பொறுப்பாவார்.
3. கழிவறை மற்றும் குளியலறை கட்டிடஙகளுக்கு அமைக்கப்பட்ட மின் பொருட்கள், தண்ணீர் குழாய்கள் உட்பட எந்தவொறு பொருள் பழுது ஏற்பட்டாலும் உரிமதாரர் சொந்தச்செலவில் பராமரிக்க வேண்டும்.
4. கழிவறை மற்றும் குளியலறையை உரிமதாரர் தம் சொந்த செலவில் எப்போதும் துப்புரவாகவும், சுகாதாரமுடனும் வைத்து பராமரிக்கவேண்டும்.
5. ஆணையர் அவர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்களை கழிப்பறை மற்றும் குளியலறையை எந்தநேரத்திலும் முன்னறிவிப்பின்றி பார்வையிட அனுமதிக்கவேண்டும்.
6. உரிமையாணை பெற்றவர் 2015–16–ம் ஆண்டு பொது நிபந்தனைகளின்படி பற்றுச்சீட்டு கொடுக்காமல் வசூல் செய்யகூடாது.
7. ஒப்படைக்கப்படும் கட்டண கழிவறை மற்றும் குளியலறையினையாதொரு சேதமும் இல்லாமல் உரிமகாலம் முடிவடையும் போது திருப்பி ஒப்படைக்கவேண்டும் ஏதேனும் பழுதுகள் இருப்பது தெரியவந்தால் இழப்பீடுகளை உரிமதாரரிடம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
8. கழிவறை மற்றும் குளியலறையில் சோப்பு, எண்ணைய், சீப்பு போன்ற பொருட்கள் எதுவும் வைத்து விற்பனை செய்யக்கூடாது.
9. எதிர்பாராத விதத்தில் மின்சாரமோ, தண்ணீரோ நின்றுவிட்டால் யாதொரு இழப்பீடும் நகராட்சியால் கொடுக்கப்படமாட்டாது.
10. சிறுநீர் கழித்தல் மட்டும் இலவசமாக அனுமதிக்கவேண்டும்.

**<u>அலுவலக குறிப்ப</u>** – வடசேரி தினசரி மீன் சந்தை வளாகத்தில் உள்ள கழிப்பறை மற்றும் குளியலறையினை மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்துடன் உள்ளடக்கி ஒரே இனமாக அட்டவணையில் கண்ட கட்டணம் வசூல் செய்திடவும் மற்றும் சிறப்பு கட்டுபாடுகளின் படி பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21003/2014/அ14

**தீர்மான எண் : 387 – அனுமதிக்கப்பட்டது.**